1993 ஏப்ரல் 15] [திரு. சு. முத்துசாமி]

முற்பகல் 11.35

பணியாளர்கள் சென்று பொது மக்களுக்குக் காலரா தடுப்பு முறையைப் பற்றி எடுத்துச் சொல்லி வருகிறார்கள். இந் நடவடிக்கை காரணமாக வயிற்றுப் போக்கு நோய் கட்டுப்படுத்தப் பட்டு இருக்கிறது. தொடர்ந்து மாநகராட்சி ஆணையாளரும், பொதுச் சுகாதார இயக்குநரும் இதிலே நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் குறிப்பிட்ட இரண்டு பகுதிகளில் மட்டுமல்ல. எங்கேயும் இது வந்துவிடக் கூடாது என்பதற்காக மாநகராட்சி முழுவதும் இந்த நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல ஒரே ஒரு நபர் இதிலே இறந்திருக்கிறார். அதற்கும் கூட காரணம் அவரை மிகக் காலதாமதமாகக் கொண்டு வந்து சேர்த்திருப்பது ஒன்று. இரண்டாவது வயதில் அவர் கொஞ்சம் மூத்தவர் என்ற காரணத்தால் அதாவது கொஞ்சம் கூடுதலான வயதானவர் என்ற காரணத்தால் அவரை உடனடியாகக் கொண்டு வந்திருந்தால் காப்பாற்றி இருக்க முடியும் என்று மருத்துவர்கள் எனக்குத் தெரிவித்தார்கள். எனவே மிக மோசமான சூழ்நிலை இருக்கிறது என்பதைப் போல மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல இல்லை என்பதையும் மற்ற இடங்களில் ஆங்காங்கே சில நேரத்தில் மழை காரணமாக திடீரென்று பாதுகாக்கப் பட்ட குடிநீரைப் பயன்படுத்தாமல் கிணற்று நீரையோ, குளத்து நீரையோ பயன்படுத்துகிறபோது திடீரென்று இந்த நிலைமைகள் ஏற்படுவதைக் கூட அரசாங்கம் மிகக் கடுமையான நடவடிக்கை எடுத்துத் தடுத்து இருக்கிறது என்பதையும், மாநகராட்சி அதற்கான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். உள்ளாட்சித் துறையைப் பொறுத்த மட்டில் மற்ற இடங்களில் இந்தப் பிரச்சினை வராமல் தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. கவன ஈர்ப்பு

(அ) வேலூரில் லாங் பஜாரில் நடு சாலையில் வியாபாரிகள் அனுமதியின்றி கடை வைத்திருப்பதால் போக்குவரத்துக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''வேலூர் லாங் பஜாரில் நடு ரோட்டில் 152 வியாபாரிகள் அனுமதியின்றி இடத்தை ஆக்கிரமித்து கடை வைத்து

போக்கு வரத்திற்கு இடைஞ்சல் ஏற்படுத்தியுள்ளது குறித்த' அவரசப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்பு மிகு உள்ளாட்சித் துறை அலமச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : பேரவைத் தலைவர் அவர்களே; விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

அறிக்கை.

வேலூர் நகராட்சி லாங் பஜாரில் பொது மக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக வைக்கப்பட்டுள்ள தற்காலிக ஆக்ரமிப்புக் கடைகள் அவ்வப்பொழுது அகற்றப் பட்டு வருகின்றன. மேற்படி லாங் பஜாரில் நீண்ட நாட்களாக ரோட்டின் இருமருங்கிலும் ஆக்கிரமித்துப் பழ வியாபாரம் செய்து வந்தவர்களுக்கு முன்னாள் நகராட்சி ஆணையர், முன்னாள் காவல் துறை கண்காணிப்பாளர் மற்றும் மாவட்ட ஆட்சியாளர் ஆகிய மூவரும் கலந்தாலோசித்து மேற்படி பழ வியாபாரிகளுக்கு லாங் பஜாரின் மத்தியில் 3'X3' அளவில் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் பழக்கடை வைத்துக் கொள்ள அனுமதிக்லாம் என்று முடிவெடுத்து அவ்வாறு தற்காலிகமாக கடை வைக்க அனுமதிக்கப் பட்டுப் பழக்கடைகள் வைக்கப் பட்டுள்ளன. மேற்படி இடத்தில் தற்பொழுது மொத்தக் கடைகள் 152 ஆகும். 152 தற்காலிக ஆக்கிரமிப்புக்களை 11.2.93 மற்றும் 12.2.93 தேதிகளில் அப்புறப்படுத்த, பந்தோபஸ்து அளிக்க ஏற்பாடு செய்யுமாறு வேலூர் மாவட்டக் காவல் துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் கேட்கப்பட்டது. நிர்வாகப் பணிகளை முன்னிட்டு மேற்படி தேதிகளில் பந்தோபஸ்து கிடைக்கவில்லை. லாங் பஜார் ரோட்டின் நடுவில் உள்ள தற்காலிக ஆக்கிரமிப்புகளுக்கு மாற்று இடம் ஒதுக்கீடு செய்வது குறித்து மாவட்ட ஆட்சியர் அளவில் பரிசீலனையில் உள்ளது. அதன் முடிவு பெறப்பட்ட பின் கவன ஈர்ப்பில் குறிப்பிட்டுள்ள லாங் பஜார் நடுவில் உள்ள அனைத்து தற்காலிக ஆக்கிரமிப்புக்களும் விரைவில் அப்புறப்படுத்தப்படும்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகராட்சி லாங் பஜாரில் பொது மக்களுக்கும் போக்குவரத்துக்கும் இடையூறாக 152 பேர் நடு ரோட்டை ஆக்கிரமித்துக் கடை வைத்திருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களும் தன்னுடைய அறிக்கையில் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அப் படிப்பட்ட சூழ்நிலை இருந்த போதும் இன்னும் அதை அப்புறப்படுத்தாமல் இருப்பது வேதனைக்குறிய ஒன்று. அவ்வப்போது ஆக்கிரமிப்பு அகற்றப் பட்டு வருகிறது என்ற உண்மைக்குப் புறம்பான தகவலை மாண்பு

மிகு அமைச்சர் அவர்களுக்கு நகராட்சி ஆணையர் தந்திருக்கிறார். மறைந்த ராணிப்பேட்டை சட்ட மன்ற உறுப்பினர் வணக்கத்திற்குரிய திரு. என். ஜி. வேணுகோபால் அவர்கள் 4.9.92 ல் அக்கடைகள் போக்கு வரத்துக்கு இடையூராக உள்ளதால் அவற்றை அப்புறப்படுத்த வேண்டுமென்று ஒரு கடிதத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கும், அதேபோல் நகராட்சி ஆணையருக்கும் கொடுத்திருக்கிறார்கள். அப்படி இருந்தும் கூட பல மாதங்கள் ஆகியும் கூட இன்னும் கூட அந்த கமிஷனர் அவர்கள் அதை எடுக்காமல் இருக்கிறார்கள். ஒரு தனிப்பட்ட**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேட்க வேண்டும்.

திரு. சி. ஞானசேகரன் : வணக்கத்திற்குரிய அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுத்து ஆவன செய்ய வேண்டும் . இன்று நகராட்சி நிதி நெருக்கடியால். மிகவும் பாதிக்கப்பட்டு சம்பளத்தைக் கூட 15, 20 தேதிகளில் தான் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அப்படி இருக்கும் போது** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அக்கடைகளை உடனே அப்புறப்படுத்துவதில் தனிக் கவனம் செலுத்தி உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மெயின் பஜார், லாங் பஜார் போன்ற பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்புக்கள் கடந்த 5.1.'93 மற்றும் 23.1.'93 ஆகிய தேதிகளில் அகற்றப்பட்டன. பொது மக்களுக்கு இடையூறு விளைவிக்கும் எந்த ஒரு ஆக்கிரமிப்பாக இருந்தாலும் அதில் தமிழகத்தின் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால அரசு உடனுக்குடன் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அதே நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அரசு தக்க நிவாரண உதவி செய்யவேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த கவனஈர்ப்புத் தீர்மானத்தின் மூலம் குறிப்பிட்டுள்ள அந்த லாங் பஜாரில் உள்ள, ஆக்கிரமிப்புகளைச் செய்து உள்ள 152 சிறு வியாபாரிகளுக்கும் தக்க மாற்று இடம் தேர்வு செய்து கொடுக்க வேண்டும் என்பதற்காக தாமதம் ஏற்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது

[திரு. அழகு திருநாவுக்கரசு] [1993 ஏப்ரல் 15

தக்க இடம் தேர்வு செய்வதற்காக ஆணைகள் இடப்பட்டிருக்கின்றன. அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இடம் தேர்வு செய்யப்பட்டதும் நிச்சயமாக இந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ** என்று இருப்பது சரியல்ல. அதுபற்றி விவரமும் கூட எனக்குத் தெரிவிக்கவில்லை. எனவே அது அவைக் குறிப்பிலே இருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) கால் அட்டன்ஷனில் தனிப்பட்ட குற்றச்சாட்டு கூடாது என்று இருக்கிறது. எனவே அது அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. மற்றவை எல்லாம் இருக்கும். திரு. சி. ஞானசேகரன். கேள்வி மட்டும் கேளுங்கள்.

திரு. சி. ஞானசேகரன் : ஏற்கனவே ஆதாரங்கள் இருக்கின்றன என்று தங்களுடைய அறையிலேகூட நான் தெரிவித்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது பற்றி கால் அட்டன்ஷனில் வராது என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே அவர்கள் 152 என்று, அதாவது 1,2,3 என்று 152 எண்ணைக் கொடுத்துக்கூட—முனிசிபாலிட்டியல்ல. முனிசிபாலிட்டி கமிஷனர் பெயரைக் கொடுக்காமல், வேறு யாரோ 1,2,3 என்று 152 எண் கொடுத்து கடைகள் வைத்து நடத்துவதை இந்த அரசு அனுமதிக்கிறதா என்று ஒன்றை நான் இந்த இடத்திலே கேட்டுக்கொள்கிறேன். இங்கே மற்ற ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்பதிலே மாற்று கருத்து எனக்கும் கிடையாது. அதைக் கொடுப்பதற்கு நானும் பலமுறை சொல்லி இருக்கிறேன். இருந்தபோதிலும்கூட இப்போதிருக்கக்கூடிய நகராட்சி ஆணையாளர் அவர்களும், மற்றவர்களும் விரைந்து நடவடிக்கை எடுப்பார்கள் என்று நீங்கள் அறிக்கையிலே சொல்லியிருக்கிறீர்கள். இரண்டாவது மாதத்தில் நாங்கள் போலீஸ் பாதுகாப்பு கேட்டோம். இன்னும் கிடைக்கவில்லை என்றும் சொல்லியிருக்கிறீர்கள். அந்த கடைகளை அப்புறப்படுத்துதவற்காக போலீஸ் பந்தோபஸ்து கேட்டு போலீஸ் பந்தோபஸ்து கிடைக்காத காரணத்தினாலேயே அதைச் செய்யமுடியவில்லை என்று அறிக்கையிலே சொல்லியிருக்கக்கூடிய கட்டத்தில் மற்ற ஏற்பாட்டை நீங்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

உடனிணைக்கிறீர்கள். மாற்று ஏற்பாடு செய்வது 2 மணி நேரத்தில் செய்துவிடலாம். ஒரே ஒரு போலீஸ் கான்ஸ்டேபிள் கூட அந்தக் கடைக்காரர்களை உடனே அப்புறப்படுத்திவிடலாம். அப்படி இருந்தும்கூட மாதக் கணக்கிலே 9வது மாதத்திலே மாண்புமிகு என்.ஜி. வேணுகோபால் அவர்கள், ராணிப்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கூட கடிதம் கொடுத்திருக்கிறார்கள். நானும் வலியுறுத்திக்கொண்டிருக்கிறேன். ஒவ்வொரு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்திலும் வலியுறுத்தி வருகிறோம். இருந்தும்கூட முனிசிபல் கமிஷனர் அவர்களும் மற்றவர்களும் இன்னும் காலதாமதம் செய்து கொண்டிருப்பது, அங்கேயிருக்கக்கூடிய மக்களுக்கு ஒரு பெருத்த மனக்கொதிப்பை ஏற்படுத்தி பேரணி நடத்தினார்கள். உண்ணாவிரதம் இருந்தார்கள். பல தொண்டு நிறுவனங்கள் எல்லாம் பல கோரிக்கைகளை வைத்திருந்தும் கூட . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்கவும்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்னும் ஒரு வார காலத்திற்குள் அதை எப்படியாவது அப்புறப்படுத்தி அங்கே போக்குவரத்து இடையூறு இருப்பதை நீக்கிக்கொடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் நகரத்தில் மட்டும் இதுபோன்று ஆக்கிரமிப்புகள் நடைபெறவில்லை. தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு நகரங்களிலே எல்லாம் சாலை ஓரங்களில் சிறு வியாபாரிகள் எல்லாம் தங்களுடைய அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்காகக் கடைகளை வைத்திருக்கிறார்கள். இதுபற்றி என்னுடைய மானியக் கோரிக்கையிலே பல்வேறு ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் வழங்க இருக்கிற காரணத்தினால், இதிலே விரைவில் நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்து விடைபெறுகிறேன்.

(ஆ) வேடசந்தூர் தாலுகா மிதுக்கம்பட்டியில் உள்ள குட்வில் டெக்ஸ்டைல்ஸ் மில் தொழிலாளர்கள் உண்ணாவிரதத்தைக் காவல் துறையினர் தடுப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. வே. தம்புசாமி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.